# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**C.C. 174/2025 Date : 11.03.2026. P.W.3 / LW.1**

| பெயர் | ஹரிகிருஷ்ணன் | ஆதார் எண் | |
|---|---|---|---|
| தகப்பனார் பெயர்; | பாலு | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | விழுப்புரம் | வயது | 28 |
| 1,2 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை..**

நான் தற்போது விழுப்புரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 14.02.2024 -ந் தேதி இரவு சுமார் 23.00 மணிக்கு எலவனாசூர்கோட்டை காவல்நிலையத்திற்கு உட்பட்ட கூத்தனூர் ஆண்டவர் கோயில் அருகே உள்ள ஏரியில் ரோந்து பணியில் நான் முதல்நிலை காவலர் திரு. ராமலிங்கம் மற்றும் திரு. மணிகண்டன் ஆகியோருடன் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்படி ஏரியில் அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி கள்ளத்தனமாக ஏரி வண்டல் மண்ணை களவாடி சென்றதாக கிடைத்த தகவலின் பேரில் மேற்படி இடத்திற்கு நாங்கள் சென்றபோது JCB வாகனத்தை ஓட்டி வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த ஐயப்பன் வயது 30 த/பெ கணேசன் என்பவர் JCB -யை அங்கேயே நிறுத்திவிட்டு தப்பித்து சென்றுவிட்டார். மற்றும் மெர்வின் வயது 21 த/பெ ஆப்பிரகாம் என்பவர் அவருக்கு சொந்தமான TN 15 E 9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பரில் சுமார் 1 யூனிட் வண்டல் மண்னை களவாடி சென்றவரை பார்ட்டி சகிதம் எதிரி மெர்வின் பிடித்து விசாரணை செய்ததில் மேற்படி நபர்கள் எவ்வித அரசு அனுமதியும் பெறமால் கள்ளத்தனமாக சுயலாபத்திற்காக விற்பனைக்காக அள்ளி சென்றதாக கூறியுள்ளார். மேற்படி நபரை அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி கள்ளத்தனமாக ஏரி வண்டல் மண்ணை களவாடி சென்றத்தற்காக 15.02.2024-ந் தேதி அதிகாலை சுமார் 00.30 மணிக்கு கைது செய்து உச்சநீதிமன்ற கட்டளையை நிறைவேற்றி கைது குறித்து, உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தோம். பின்னர் களவாட பயன்படுத்திய பதிவெண் இல்லாத JCB மற்றும் TN 15 E 9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பரில் உள்ள சுமார் 1 யூனிட் அளவுள்ள ஏரி வண்டல் மண்ணை அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் கைப்பற்றி

என்னுடன் வந்த முதல்நிலை காவலர் ராமலிங்கம்,முதல்நிலை காவலர் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் 01.00 மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். பின்னர் கைப்பற்றிய வழக்கின் சொத்துகள் மற்றும் எதிரி மெர்வின் பார்ட்டிகள் சகிதம் உதவியுடன் 01.30 மணிக்கு காவல்நிலையத்திற்கு வந்து மேற்படி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து எலவனாசூர்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 49/2024 இதச சட்டப்பிரிவு 379 மற்றும் 21(1) MMDR ACT -ன் படி முதல்தகவல் அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த **முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.2** ஆகும்.பின்னர் எதிரி மெர்வின் என்பவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.பின்னர் வழக்கின் சொத்துகளை நமூனா 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த நமூனா 91 அ.சா.ஆ-3 ஆகும்.** பின்னர் உளுந்தூர்பேட்டை உதவி பொறியாளர்(பொது பணித்துறை நீர்பாசனப்பிரிவு) அவர்களுடன் நீதிமன்ற உத்தரவின் படி எதிரி களவாடிய மணலைஅரசுக்கு ஆதாயம் தேடும் பொருட்டு வண்டல் மண்ணை அவரிடம் ஒப்படைத்தேன். பின்னர் 11.03.2024-ந் தேதி இதச சட்டப்பிரிவு 379 மற்றும் 21(1) MMDR ACT -என இருந்ததை பிரிவு மாற்றம் செய்து இதச சட்டப்பிரிவு 379 -ன் படி பிரிவு மாற்றம் செய்தேன். **அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் எதிரியிடம் இருந்து கைப்பற்றிய வழக்குசொத்தான பதிவெண் இல்லாத JCB Engine no.h00381425, chesis No. HAD3DXS4V03300076 (புகைப்படம்) **அது சா.பொ.1 ஆகும்**. TN 15 E 9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் (புகைப்படம்) **அது சா.பொ.2 ஆகும்**. பதிவெண் இல்லாத டிப்பர் சுமார் 1 யூனிட் அளவுள்ள ஏரி வண்டல் மண் (புகைப்படம்) **அது சா.பொ.3 ஆகும்**. மேற்படி வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து திரும்ப பெற்றுக்கொண்டனர். நான் இரவு நேரத்தில் வழக்கு சொத்தை பார்வையிட்டதால் Engine no.h00381425 -ஐ தவறுதலாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டுள்ளேன். பின்னர் நிலையம் வந்து வழக்கு சொத்தை பார்த்த போது Engine no.5502200 என தெரியவந்தது. பின்னர் எதிரிகள் மீது இதச பிரிவு 379 -ன் கீழ் இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.காவல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு கிளம்பினேன் என்றால் மாலை 4.00 மணிக்கு கிளம்பினோம். சம்பவ இடத்திற்க எத்தனை மணிக்கு போனோம் என்றால் இரவு 11.00 மணிக்கு போனோம். காவல்நிலையத்தில் இருந்து செல்லும் வழியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் ரோந்து பணியில் சென்றுவிட்டு சம்பவ இடத்திற்கு சென்றோம்.

2. மூவரும் ஒரே வாகனத்தில் சென்றோமா அல்லது தனிதனியாக சென்றோமா என்றால் நியாபகம் இல்லை. அரசு வாகனத்தில் சென்றோமா அல்லது சொந்த வாகனத்தில் சென்றோமா என்றால் எனது இருசக்கரவாகனத்தில் சென்றேன். ரோந்து பணிக்கு

செல்லும் போது டைரி, கார்பன் பேப்பர், ஏ 4 சீட் , டார்ச் ஆகியவற்றை எடுத்துச்சென்றேன். சம்பவ இடத்தில் எதிரி மெர்வினை யார் பிடித்தது என்றால் நான் தான் பிடித்தேன்.

3. முதல்தகவல் அறிக்கையில் மெர்வினுக்கு சொந்தமான வாகனம் என்று எதன் அடிப்படையில் சொன்னேன் என்றால், எதிரியிடம் கேட்டபோது எதிரி தன்னுடையது என்று கூறினார். மேலும், அந்த வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் இல்லாததால் அவர் சொன்னதை முதல்தகவல்அறிக்கையில் சொல்லியுள்ளேன்.எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை.

4. டிராக்டர் வாகனம் யாருடையது என்று விசாரித்தேனா என்றால் நீதிமன்ற வழக்கு சொத்தாக்கிய போது டிராக்டர் வாகனம் எதிரிகள் உடையது அல்ல என்று தெரியவந்தது. நான் எப்பொழுது இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் 29.03.2024 -ந் தேதி தாக்கல் செய்தேன். டிராக்டர் வாகனத்தின் உரிமையாளர் யார் என்பது தெரிந்தபின்னும் எதிரிகள் மீது ஏன் இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. டிராக்டர் வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதை இறுதிஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எதிரி மெர்வினுக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளேன். ஆவணத்தின் அடிப்படையில் வாகனத்தின் உரிமையாளர் எதிரி மெர்வின் அல்ல என்றால் சரிதான். ரோந்து பணிக்கு செல்லும் போது JCB வாகனத்தை கண்ணால் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன்.

6. JCB வாகனத்திற்கு பதிவெண் இல்லை என்பதை எதன் அடிப்படையில் சொன்னேன் என்றால் வாகனத்தை பார்த்து தான் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் சான்றுப்பொருள் 1-ன் புகைப்படத்தில் உள்ள வாகனத்தை தான் நான் கைப்பற்றினேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் சான்றுப்பொருள் JCB வாகனத்தின் பதிவெண் உள்ளதா என்றால் உள்ளது. அதன் பதிவெண் TN 15 E 9732 ஆகும்.

7.கைப்பற்றுதல் மகசர் கூத்தனூர் ஆண்டவர் கோவில் ஏரியில் தயார் செய்தேன். எதிரி மெர்வினை பிடித்து எவ்வளவு நேரம் விசாரணை செய்தேன் என்றால் 23.00 மணியிலிருந்து 01.00 மணி வரை விசாரணை செய்தேன். 01.00 மணிக்கு பிறகு தான் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு கைப்பற்றிய வாகனங்களை யார் ஓட்டி வந்தது என்றால் நியாபகம் இல்லை.

8. இறுதிஅறிக்கை தாக்கல் செய்யும் போது JCB வாகனத்தின் Engine no.5502200 என்று குறிப்பிட்டுள்ளேன். கைப்பற்றுதல் மகசரில் Engine no தவறாக உள்ளதை இறுதிஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் குறிப்பிடப்படவில்லை. ஏரியிலிருந்து மண் எடுக்க வருவாய் துறை அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும். எதிரிகள் வருவாய் துறையினர் அனுமதியின்றி மண் எடுத்தார்கள் என்பது குறித்து வருவாய் துறையினரிடம் விசாரித்தேனா என்றால் போனில் அழைத்தேன் அவர்கள் அழைப்பை எடுக்கவில்லை.

9. நான் நேரியாக சென்று வருவாய் துறையினரிடம் சென்று விசாரித்தேனா என்றால் இரவு நேரம் என்பதால் வருவாய் துறையினரிடம் விசாரிக்க இயலவில்லை. இறுதி அறிக்கை தாக்கல் செய்த போதாவது வருவாய் துறையினரிடம் விசாரித்தேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகள் மீது காவல் நிலையத்தில் வேறு வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை. நான் புதியதாக எலவனாசூர்கோட்டை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் சேர்ந்ததால் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்து சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வேண்டுமென்றே இறுதி தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Typed by E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.03.11 15:23:02 +0600

Judicial Magistrate-I,
Ulundurpet.